# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

முறையீட்டு மனு எண். 136/மா/2023,
நாள் 27.12.2024

திரு ஆர். மயில்சாமி ............... மனுதாரர்
மதுரை.

1)உதவி ஆணையர். ................ எதிர் மனுதாரர்கள்
மண்டலம் 3 (மத்தியம்).
மதுரை மாநகராட்சி.

2) உரிமையாளர்,
சுகுணா மஹால் திருமண மண்டபம்
மதுரை–16.

மதுரை புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு.ஆர்.மயில்சாமி என்பவரின் 08.05.2023 மற்றும் 06.07.2023 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 10.05.2023 மற்றும் 10.07.2023 அன்று பெறப்பட்டு 136/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு மனை எண்.5–ல் வசிக்கும் திரு ஆர்.மயில்சாமி என்பவர் 08.05.2023 மற்றும் 06.07.2023 நாளிட்ட தனது மனுக்களில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) –க்கு உட்பட்ட மகபூப்பாளையம் கதவு எண். 56 பாரதிதாசன் சாலை, TB ரோட்டில் உள்ள சுகுணா மஹால் (திருமண மண்டபம்) அனுமதிக்கு மாறாக மூன்று மாடி கட்டிடம் கூடுதலாக கட்டப்பட்டுள்ளது. சுகுணா மஹாலுக்கு சொத்துவரி, கட்டிடத்தை முழுமையாக அளவீடு செய்யாமல் குறைந்த வரி வசூலிக்கப்படுவதால் மதுரை மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும், மேற்படி சுகுணா மஹால் முன்பாக உள்ள கிருதுமால் நதியை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.175 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 14.7.2006–ன்படி ஆறு, குளம், ஏரி, ஓடை, சுடுகாடு இடுகாடு, மின்வழிதடம் போன்றவைகளில் இருந்து 100 மீட்டர் தூரத்தில்தான் கட்டுமானம் கட்டிடம் இருக்க வேண்டும். ஆனால் மேற்படி மஹால் கிருதுமால் நதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். மேலும், இக்கட்டிடத்திற்கு நான்குபுறமும் 5 அடி இடைவெளியும் விடவில்லை. அவசரகாலவழியும் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம்

என்பதால் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33–ன்படி அக்கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தில் ஒப்புதல் பெறவில்லை.

சுகுணா மஹால் திருமண மண்டபம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) கட்டம் 1965-பிரிவு 2(8)–ன்படி வருவாய்த்துறையிடம் உரிமம் பெற்று மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுபிக்க வேண்டும். ஆனால் உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக சுகுணா மஹால் இயங்கி வருகிறது. மேலும் சுகுணா மஹாலுக்கு வாகனம் நிறுவத்துவதற்கு சிறிதளவு இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சுகுணா மஹால் திருமண மண்டபம் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டியும், கிருதுமால் நதியை ஆக்கிரமிப்பு செய்தும், வாகனம் நிறுத்துவதற்கு போதிய இட வசதி அளிக்காமலும், இயங்கி வரும் சுகுணா மஹால் திருமண மண்டப கட்டிடத்தின் மீது நகர்புற ஊரமைப்பு சட்டம்1971–ன் பிரிவு 56 (1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85–ன்கீழ் நடவடிக்கை எடுக்குமாறும், மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறை மன்ற நடுவ 02.10.2024 நாளிட்ட அறிவிக்கையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

“மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையர் 08.10.2024 நாளிட்ட அறிக்கையில் :-“சுகுணா மஹால் 25 வருடத்திற்கு முந்தைய கட்டிடம் எனவும் அதற்கு வரைபட அனுமதி நகல் இல்லை என சுகுணா மஹால் உரிமையாளர் தெரிவித்துள்ளார் எனவும், இம்மண்டபத்திற்கான திட்ட வரைபட அனுமதி ஆணை பெறப்பட்டிருப்பின் அதனை வழங்க தெரிவித்து 31.05.2023–ல் உறுப்பினர், செயலாளர் உள்ளூர் திட்ட குழுமம், அவர்களுக்கு கடிதம் அனுப்பபட்டு, இது வரை நகல்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும், சுகுணா மஹால் கட்டிடம் வார்டு 59, வரிவிதிப்பு எண்.115/49226 கதவு எண்.56, பாரதிதாசன் சாலையில் பாண்டி என்ற பெயரில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது என்றும், 2008–க்கு முன் தங்கும் விடுதி மண்டபங்களுக்கு தினசரி நாள் வாடகை அடிப்படையில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், சுகுணா மஹால் கட்டிடத்திற்கு வாகன நிறுத்த இட வசதி இல்லையென்றும், தெரிவித்துள்ளார்.”

3. இம் மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.12.2024 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 17.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–க்கு உட்பட்ட மகபூப்பாளையம் கதவு எண்.56 பாரதி நகரில் உள்ளது சுகுணா மஹால் திருமண மண்டபம்.

(1) அனுமதிக்கு மாறாக இரண்டு மாடி கட்டிடத்துடன் இயங்குகிறது.

(2) மேற்கண்ட சுகுணா மஹால் கட்டிடத்தை முழுமையாக அளவீடு செய்யாமல் வரி விதித்து மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(3) மேற்கண்ட சுகுணா மஹால் கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Side set back) விடாமல் கட்டப்பட்டுள்ளது.

(4) மேற்கண்ட சுகுணா மஹால் கட்டிடம் கிருதுமால் நதியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது.

(5) மேற்கண்ட சுகுணா திருமண மஹால் வாகனம் நிறுத்த இடவசதி அளிக்காமல் கட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால் உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு மதுரை மாநகராட்சிக்கு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டிடத்தின் மீது தமிழ்நாடு ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56, 57-ன் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கவும், என் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்க தவறிய மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்''.

4. மதுரை மாநகராட்சியின் உதவிப்பொறியாளர்கள் 17.12.2024 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள சுகுணா மஹால் 25 வருடத்திற்கு முந்தைய கட்டிடம் அதற்கு வரைபட அனுமதி நகல் இல்லை என்று அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட திருமண மண்டபம் கிருதுமால் நதியிலிருந்து 1 மீட்டர் இடைவெளியில் கட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட திருமண மண்டப கட்டிடத்திற்கு வாகன நிறுத்தும் இடவசதி இல்லை

மேற்கண்ட திருமண மண்டப கட்டிடத்தை கள ஆய்வு செய்து விதி மீறல் இருப்பின் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை ஒரு மாத கால அவகாசத்தில் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்."

மற்றொரு எதிர்மனுதாரராகிய சுகுணா மஹால் திருமண மண்டபத்தின் உரிமையாளருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை "unclaimed" என்று திரும்ப பெறப்பட்டுள்ளது.

5. மனுதாரரின் மனு, வாக்குமூலம், மற்றும் மதுரை மநாகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கை, உதவிப்பொறியாளர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) மகபூப்பாளையம் கதவு எண்.56, பாரதிதாசன் சாலை, TB ரோட்டில் உள்ள சுகுணா மஹால் (திருமண மண்டபம்) அனுமதிக்கு மாறாக கூடுதலாகவும், கிருதுமால் நதியை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும், சொத்துவரி குறைத்து வசூலிக்கப்படுவதாகவும், திருமண மண்டபத்தின் கட்டிடத்திற்கு

நான்குபுறமும் 5 அடி இடைவெளிவிடாமல் கட்டப்பட்டு உள்ளது என்றும், வாகனம் நிறுத்துவதற்கு இடவசதி அளிக்காமலும், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால், நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி நடவடிக்கை எடுக்குமாறும், தனது மனு மீது நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சுகுணா மஹால் திருமண மண்டபம் கட்டிடம் 25 வருடத்திற்கு முந்தைய கட்டிடம் எனவும், அதற்கு வரைபட அனுமதி நகல் இல்லை என்றும், மேற்கண்ட திருமண மண்டபம் கிருதுமால் நதியிலிருந்து 1 மீட்டர் இடைவெளியில் கட்டப்பட்டுள்ளது என்பதும், வாகனம் நிறுத்துவதற்கு இடவசதி அளிக்கப்படவில்லை என்பதும், மேலும், மேற்கண்ட திருமண மண்டப கட்டிடத்தை கள ஆய்வு செய்து விதி மீறல் இருப்பின் உரிய சட்டபூர்வ நடவடிக்கையை ஒரு மாத காலஅவகாசத்தில் எடுக்கப்படும் என்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர்களின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரரால் 2023–ஆம் ஆண்டே சுகுணா மஹால் திருமண மண்டப கட்டிடம் தொடர்பாக புகார் மனு அளித்தும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் அலுவலர்கள் இது நாள் வரை கள ஆய்வு உள்ளிட்ட எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது கண்டிப்பிற்குறியது. எனவே, கிருதுமால் நதி ஆக்கிரமிப்பு தொடர்பான புகார் குறித்து நீர்வளத்துறையுடன் இணைந்தும், setback மற்றும் பார்க்கிங் இடம் குறித்து, மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவிப் பொறியாளர்கள் தங்களுடைய வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு ஒரு மாத காலத்திற்குள் கள ஆய்வு மேற்கொண்டு, கள ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படியும், பகுதி VIII தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சட்டம் 1998–ன்படியும் தேவையிருப்பின் அரசாணை (நிலை) எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2024–ஆம் அண்டு டிசம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.R.மயில்சாமி,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புது விளாங்குடி,
மதுரை–18.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–2.

3) உதவி ஆணையாளர்,
மண்டலம் 3 (மத்தியம்),
மதுரை மாநகராட்சி,
மதுரை—625 001.

4) உரிமையாளர்,
சுகுணா மஹால் திருமண மண்டபம்,
மகபூப்பாளையம், பாரதிதாசன் சாலை,
56, T.B. ரோடு.
மதுரை—625 016.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28.

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 28

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ / உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).